அமரர்

# ஐயாத்துரை சண்முகராசா

அவர்களின்

# வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும்"

நல்லெழிற் பொழிவும் இந்து சமுத்திரத்தின் இள நங்கைப் பாதவடிவில் சைவப்பழம்பெரும் மன்னர்கள் அரசாண்ட ஈழத்தின் வடபால் நந்தவனமாய் விளங்கும் யாழ்ப்பாணத்தின் தென்மேற்குத் திசையில் ஆழ்கடல் அலைகள் கரைமேல் தாள் பதித்து முகில்கள் மேலாட தெங்குகள் மலிந்து திருவாலயங்கள் சூழ வாரும் வளங்கள் நால் திசைகளும் குவிய முத்தமிழ் வித்திடும் தேசமாயென்னும் பொன் கொளியூராம் புங்குடுதீவு, 8ம் வட்டாரத்தைதில் உயர் வேளான்குலத்தில் வந்த ஐயாத்துரை பராசக்தி தம்பதியினருக்கு மூத்த புதல்வனாய் கற்றோரும் மற்றோரும் போற்றும் கனிமிகு சுடராய் 1939.07.26 திகதி திரு சண்முகராசா பிறந்தார்.

கூடவே பிறந்தோர் புவனேஸ்வரி, தவமணி, நாகேஸ்வரி, பராசக்தி, மகேஸ்வரன், யோகேஸ்வரன், இராயேஸ்வரன் ஆகியோர்.

தனது குழந்தைப் பருவத்திலே தாயை இழந்தார். தனது அம்மம்மாவின் அரவணைப்பில் வாழ்ந்தார். சிறு பராயத்திலேயே உழைப்பின் அவசியம் புரிந்து தொழில் நிமித்தம் கொழும்பு சென்று கொழும்பில் தொழில் செய்து வந்தார். உழைப்பின் பயனாய் படிப்படியாக முன்னேற்றம் அடைந்து கொழும்பில் சொந்தமாக மில் ஒன்றை நடாத்தி வந்தார். .



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு வாழ்ந்து மணப் பருவத்தில் இல்லறமென்னும் நன்நெறிக்கீழ் வாழை தோரணம் வாழ்த்துரைக்க மாலை மணவறை வரவேற்க புங்குடுதீவிலே வாழ்ந்த சைவப் பண்புயர் குடும்பம் சுப்பிரமணியம் நல்லதங்கம் தம்பதிகளின் மகள் அரியமலர் அவர்களை தம் மணையாளாய் பெற்றோர் ஆசீர்வாதத்துடன் கரம்பற்றி ஈருருயிரும் ஒருடலுமாக ஒன்றித்து வாழ்ந்தனர்.

நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமக இடம்பெயர்ந்து வட்டக்கச்சி இராமநாதபுரத்தில் வாழ்ந்தார். அங்கு மீண்டும் தனது முயற்சியால் "விக்னேஸ்வரா மில்" ஐ ஆரம்பித்தார். தனது தொழிலை திறம்பட மேற்கொண்டு முன்னேறினார்.

மங்கலம் என்பது மனையாட்சி மற்றதன் நன்கலம் நன்மக்கட்பேறு எனும் வள்ளுவன் வாய்மொழிக்கேற்ப இவர் தமக்கு கருணாநிதி (அமரர்), சத்தியவாணி, கண்ணதாஸன், விக்கினேஸ்வரன், சத்தியபாமா, சத்தியராசா, எனும் அன்புச் செல்வங்கள் வந்துதித்தனர்.

பிள்ளைகளை நல்லமுறையில் நடாத்தி ஒழுக்க சீலர்களாக்கி இனிய கல்வி பயிற்றி பிள்ளைகளின் வழிகாட்டியாக கடமைகளை வழுவாது செய்து தக்க பருவங்களில் திருமணம் செய்து வைத்தார்.

முறையே ஜெயந்தி, கிருபாகரன், நிர்மலாஜினி, தமிழினி, சிவயோகராசா, சர்மிளா ஆகியோரை மருமக்களாய் தேர்ந்தெடுத்தார். இவ்வாறு மக்கள் மருமக்களோடு இனிது பேசிப்பழகியும் , மகிழ்தும் சிறப்புற வாழ்ந்தார்.

மிகவும் சிறப்பான உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் நற்பெயரோடும், நற்புகழோடும் விளங்குகின்ற பேரப்பிள்ளைகளை தன் பிள்ளைகள் போல் போற்றி வளர்த்து அவர்களின் பேரன்பைத் தனதாக்கி கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இவ்வாறு வாழ்ந்து வரும் வேளையில் மீண்டும் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலை காரணமாக வட்டக்கச்சியில் இருந்து இடம்பெயர்ந்து வவுனியாவில் வசித்து வந்தார். இவ்வேளையில் அவருடைய மூத்தமகன் கருணாநிதியை இழந்தார். இன்னல்கள் ஏற்பட்ட போதும் மனம் தளராது தனது உழைப்பினாலும், முயற்சியினாலும் மீண்டும் வவுனியாவில் "கருணாநிதி கிரைண்டிங் மில்" எனும் தொழில் ஸ்தாபனத்தை தொடங்கி சிறப்புடன் நடாத்தி வந்தார்.

இவ்வாறு எல்லோரையும் உறவுகளாக அரவணைத்து மகிழ்வுடன் வாழ்ந்தார். இவ்வாறு வாழ்ந்து வரும் நேரத்தில் நோய் அவரை ஆட்கெண்டது. காலதேவன் காலம் குறித்து வந்து தன் கருமமாற்றுவதை மாற்றிட வல்லார் யாருளர் புவியில். 2017.02.02இல் மிக அமைதியாகபோய் வருகிறேன் என சொல்லிச் செல்வது போல நம்மையெல்லாம் ஆறாத்துயரில் ஆழ்த்திவிட்டு விண்ணுலகு எய்தினார்.

அழியாத ஆலமரமாக பலமான விழுதுகளில் தன் குடும்ப விருட்சத்தை நிலைநிறுத்திச் சென்றுள்ளமையால் இவர் ஆன்மா இறைவன் பாதத்தில் இனிது இருக்க எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி! ஓம் சாந்தி!





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மக்கள் புலம்பல்

அப்பாவே அப்பாவே அன்பான அப்பாவே
எங்களைத்தான் தவிக்கவிட்டு எங்கு சென்றீர்?
நாம் கேட்டதெல்லாம் கொண்டு வந்து தருவீரப்பா
இனியதனை யாரிடம் நாம் கேட்போமப்பா
ஆறு பிள்ளைகள் போதும் என்று
பாசத்தினைக் கொட்டி எமை வளர்த்தீரப்பா
நோயுற்றீர் என்பதை நாம் அறிவோமப்பா
எமைவிட்டு விரைவாகப் பிரிவீரென்று
எண்ணியே பார்த்ததில்லை எங்களப்பா
எங்களைத்தான் பிரிந்தேகிச் சென்ற உங்கள்
ஆத்மா எங்களுக்கு நல்வழியைக் காட்டி
சாந்தி பெற்றே இறைவன் பாதம் வேண்டுகின்றோம்.

## மருமக்கள் புலம்பல்

அன்பிற்கு நல் மாமாவாய் - அன்பு
மழை பொழிந்த மாமாவே!
வெந்துயரில் நாமிழந்து வேதனையில்
வாடி வெதும்பித் துடிக்கின்றோம்
எம் அருமை மாமாவே!
எம்மை விட்டகல மனம் வந்ததோ மாமாவே!
இல்லை காலனவன் கயவனோ, கள்ளனோ
எம் அருமை மாமாவே!
ஆறுதல் சொல்ல ஆயிரம் உறவுகள்
இருந்தென்ன உங்கள் இழப்பை
ஈடு செய்ய யார்தான் முடியும் மாமாவே!
உங்கள் ஆத்மா சாந்திபெற
ஆண்டவனை வேண்டுகின்றோம்.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேரப்பிள்ளைகள் புலம்பல்

என்றும் எம் பாசத்துக்குரிய அப்பப்பா...
இனிப்பான பண்டங்கள்
வாங்கித்தரும் அம்மப்பா
கனிவான நல்கதைகள்
சொல்லித்தரும் அப்பப்பா
ஆசி தரும் அப்பப்பா
போனதெங்கே அம்மப்பா?
இன்றெம்மை விட்டு
எங்கு சென்றீர்கள்?....
ஏங்கித் தவிக்கின்றோம் அப்பப்பா.....


## மைத்துனர் மைத்துனிமார் சோகம்

மச்சான் என்று வந்தால் எங்களை அரவனைத்து
அன்புடன் பகிர்ந்து மகிழ்வீர்களே
நவரசம் கலந்த பகிடிகள் விட்டு மகிழ்வீர்களே
உங்களுடைய திரு முகத்தை எங்கு காண்பது
ஆண்டுகள் மாறினாலும் உங்கள் பிரிவுத்துயர் மாறாது.

## அயலவர்கள் துயர்

துயிலெழுந்ததிலிருந்து நீ பேசும் குறும்பு பகிடிகளை
எம்மால் மறக்க முடியாதுள்ளது.
நவரசமாக பேசும் பேச்சுக்கள்
அடுக்கடுக்காக அள்ளி விடும் சொற்கள்
நாம் எப்படி ஐயா மறப்பது.
நாட்கள் நகர்ந்து சென்றலும்
நினைவுகள் நிழலாடிக் கொண்டிருக்கின்றதே.- ஐயா


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஈர விழிகளோடு இதயம் நிறைந்த நன்றி நவிலல்....

எமது குடும்பத் தலைவர் அமரர் ஐயாத்துரை சண்முகராசா அவர்களின் பிரிவுத்துயர் கேட்டு எமது சோகத்தில் பங்கு கொண்ட உறவினர்களுக்கும், நண்பர்களுக்கும் அயலவர்களுக்கும், பல் வேறு வகைகளில் உதவி புரிந்தவர்களுக்கும், வெளிநாட்டிலிருந்து தொலைபேசி மூலம் துயர் பகிர்ந்தவர்களுக்கும் இறுதி நிகழ்வின் போது கண்ணீர் அஞ்சலி பிரசுரங்கள் வெளியிட்டவர்களுக்கும் இறுதிக் கிரிகைகளில் முன்னின்று சிறப்புற நடாத்திய உறவினர்கள், நண்பர்கள், அன்பர்கள் அனைவருக்கும் அன்னாரின் அந்தியேட்டி, சபிண்டீகரண நிகழ்வில் கலந்து கொண்டு சிறப்பித்தவர்களுக்கும் இந் நினைவு மலரை அச்சிட்டு உதவிய அச்சகத்தாருக்கும் எமக்கு பல வழிகளிலும் உறுதுணையாய் நின்று உதவியவர்களுக்கும் எமது இதயம் கனிந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி



**இங்ஙனம்**
**குடும்பத்தினர்**

இல.294, 5ம் யூனிற்,
வட்டக்கச்சி,
கிளிநொச்சி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

